1996 ஆகஸ்ட் 20]

எண் *572/1*-ல் *2.60* ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. திருப்பூர் கால்நடை மருத்துவமனையில் இந்த நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் மற்றும் அருகிலுள்ள பகுதி மக்களும் தங்கள் கால்நடைகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றிற்கு சிகிச்சை நோய் தடுப்பூசி மற்றும் செயற்கை கருவூட்டல் பணிகளும் செய்யப்பட்டு வருகிறது. திருப்பூர் கால்நடை மருத்துவமனை மிகவும் பழமையானதும், பன்னெடுங்காலம் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டும் வருகிறது.

38--

தமிழகத்தின் வனப்பரப்பளவு விவரம்

வினா எண் *665*--**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் வனப்பரப்பளவு எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தின் வனப்பரப்பளவு – *22,699* சதுர கிலோ மீட்டர்

காப்புக் காட்டின் பரப்பளவு – *19,139* சதுர கிலோ மீட்டர்

காப்பு நிலங்கள் மற்றும் வகைப் படுத்தப்படாத காடுகளின் பரப்பளவு – *3,560* சதுர கிலோ மீட்டர்.

(ஆ) தமிழ்நாட்டில் காப்புக்காடுகளாக மாற்ற தகுதியான நிலம் மிகவும் குறைவாக உள்ளது. வனப்பரப்பினை அதிகரிக்க சமுதாய மற்றும் புறம்போக்கு தரிசு நிலங்களை சமூக நலக்காடுகள் திட்டம் மூலமாக வனங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு *2.66* லட்சம் ஹெக்டேர் வனம் சாரா நிலங்கள் வனக்குடையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், வன நிலங்களாக மாற்ற தகுதியான நிலங்களை அடையாளம் கண்டு நிலத்தீர்வை முறையில்,

வருவாய்த் துறை அலுவலர்களால், வன நிலங்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

39--

இலவச சீத்தாப் பழக்கன்றுகள் வழங்குதல்

வினா எண் *1339*--**திரு. ஜி. கே. மணி**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக் கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக்கன்றுகள் வழங்கும் திட்டம் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

40--

சத்துணவுக்கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் *1534*--**திரு. இ. கணேசன்**: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எடப்பாடி நகராட்சி, 21-வது வார்டில் இயங்கி வரும் சத்துணவுக் கூடத்திற்கு புதியக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?